


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 23.10.2018

We Shine Academy™

guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்
- புத்தகங்கள்








## தமிழக நிகழ்வுகள்

- திருச்சி மாநகராட்சியானது பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் **(Smart City Mission)** சூரிய ஒளியிருந்து மின்சாரத்தைத் தயாரிப்பதற்கான **2.5 மெகாவாட் திறன்** கொண்ட **சூரிய ஒளிப்பூங்கா நிறுவுவதற்காக (Solar Park)** தொழில்நுட்ப மற்றும் நிர்வாக தரப்பு ஒப்புதல்களை பெறவிருக்கின்றது.
  - இப்பூங்காவை அமைப்பதற்காக பஞ்சப்பூர் என்ற இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
  - இந்த சூரிய ஒளிப் பூங்காவில் உற்பத்தியாகும் மின்சாரத்தை பொது விநியோகக் கட்டமைப்பு மூலம் விநியோகித்திட TANGEDCO உடன் இணைந்து செயலாற்ற திருச்சி மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- மத்திய கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் **தீன்தயாள் அந்தியோதயா திட்டம்** - தேசிய கிராமப்புற வாழ்வாதார திட்டம் **(DAY – NRLM/Deendayal Antyodaya Yojana – National Rural Livelihood Mission)** ஆனது லேடி இர்வின் கல்லூரியுடன் “ரோஷினி” (Roshni) அமைப்பை அமைப்பதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - ரோஷினி என்பது பெண்கள் குழுவிற்கான சமூக நடவடிக்கை மையமாகும். இது தொழில்நுட்ப ரீதியாகவும் நிதியியல் ரீதியாகவும் UNICEF என்ற அமைப்பால் ஆதரிக்கப்படுகிறது.

- **இந்தியா மற்றும் ஜப்பான்** நாடுகளுக்கிடையேயான **‘தர்ம கார்டியன்’ (Dharma Guardian)** என்ற முதல் கூட்டு இராணுவப் பயிற்சி 2018 நவம்பர் 1 முதல் 14 வரை மிசோரமின் வைரங்டேயில் நடைபெறவுள்ளது.
  - இப்பயிற்சியானது இரு நாடுகளின் இராணுவத்தினருக்கிடையேயான பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் மரியாதையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் உலகளாவிய பயங்கரவாத நிகழ்வுகளை கண்காணிக்கவும் இது உதவுகிறது.

- வரும் அக்டோபர் 26 அன்று மேகாலயாவில் **"நீலப்புரட்சி : ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் மீன்வள மேலாண்மை" (Blue Revolution)** எனும் முதன்மை திட்டம் தொடங்கப்படவுள்ளது.
    - இத்திட்டத்தின் துவக்கத்திற்கு பின்னர் அம்மா நிலமானது மீன் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்ததாக மாறும்.

- இந்தியாவின் மிக உயர்ந்த மூவர்ணக் கொடியை மும்பையில் உள்ள புகழ்பெற்ற **மெஜஸ்டிக் ஹஜ்** மாளிகையின் மேல்தளத்தில் மத்திய சிறுபாண்மை நல அமைச்சர் **முக்தார் அப்பாஸ் நக்வி** ஏற்றி வைத்தார்.
    - இந்த தேசியக் கொடியானது **20 × 30 அடி** அளவுடையது. தரையிலிருந்து சுமார் 350 அடி உயரத்தில் இது பறக்க விடப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **டென்மார்க்கின்-ஒடென்சி** நகரில் நடைபெற்ற டென்மார்க் ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **சாய்னா நேவால் இரண்டாம்** இடம் பிடித்துள்ளார்.
    - இப்போட்டியில் சீனாவின் தாய் ஜீ-யிங் முதலிடம் பிடித்துள்ளார்.
- குறிப்பு:
    - உலக பேட்மிண்டன் தரவரிசையில் சாய்னா நேவால் 10வது இடம் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விருதுகள்

- கிராமப்புற வாழ்வாதாரங்களை உறுதிப்படுத்துவதிலும், அடிமட்ட அளவில் பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதிலும் சிறப்பாக பங்காற்றியதற்காக, **ஸ்வயம் சிக்ஷன பிரயாக் (SSP – Swayam Shikshan Prayog)** அமைப்பின் நிறுவனரான பிரேமா கோபாலன் 2018-ம் ஆண்டின் சிறந்த இந்திய சமூக தொழில் முனைவோர் **(SEOY – Social Entrepreneur of Year)** என கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- குறிப்பு:

- இந்த SEOY விருதானது, 2010ம் ஆண்டு முதல் ஜீபிலாந்த பாரதிய பவுண்டேஷன் மற்றும் ஸ்வாம் பவுண்டேஷன் ஆகியவற்றால் இணைந்து வழங்கப்படுகிறது.

## முக்கிய தினங்கள்

- **தேசிய ஒற்றுமை தினம் (National Solidarity Day)**
  - அக்டோபர் 20 : - நமது நாட்டின் பரந்த எல்லைகளை பாதுகாக்கும் ஆயுதப் படைகளை கௌரவிப்பதற்காக, இந்தியாவில் தேசிய ஒற்றுமை தினமானது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 20ம் நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- குறிப்பு:
  - **அக்டோபர் 20, 1962ல் சீனா இந்தியாவைத்** தாக்கத் தொடங்கியது. அதனையடுத்து இந்திய-சீனப் போர் தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

## புத்தகங்கள்

- ஸ்டீபன் ஹாக்கின்ஸின் கடைசிப் புத்தகமான "பெரு வினாக்களுக்கான சிறு விடைகள்" **(Brief Answers to the Big Questions)** என்ற புத்தகம் அவரது இறப்பிற்கு பின் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

We Shine Academy™